Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, பிப்ரவரி 25 2024 | இதழ் 225

# கிராமி விருது பெற்ற வயலின் மேஸ்ட்ரோ கணேஷ் ராஜகோபாலனுக்கு சென்னையில் உற்சாக வரவேற்பு

சென்னை, 25 பிப் 2024: இசை மேதைகளான ஜாகிர் ஹுசைன் மற்றும் ஜான் மெக்லாலின் தலைமையிலான சக்தி குழுவினரின் சமீபத்திய படைப்பான 'திஸ் மொமென்ட்', சிறந்த உலகளாவிய இசை ஆல்பத்திற்கான கிராமி விருதை வென்றது.

சென்னையைச் சேர்ந்த கணேஷ் ராஜகோபாலன், தனது சகோதரர் குமரேஷுடன் இணைந்து கணேஷ் குமரேஷ் என்ற பெயரில் இசைப்பணியை செய்து வருகிறார். ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக இத்துறையில் கோலோச்சி வரும் அவரது பங்களிப்பு இந்திய பாரம்பரிய இசையில் அழியாத முத்திரையை பதித்துள்ளது.

இளையராஜா, ஏ.ஆர். ரஹ்மான் மற்றும் எம்.எம். கீரவாணி போன்ற முன்னணி திரை இசை அமைப்பாளர்களுடனும் கணேஷ் பணியாற்றி உள்ளார். மதிப்புமிக்க சங்கீத நாடக அகாடமி விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை அவர் பெற்றுள்ளார்.



கிராமி வெற்றி குறித்து மகிழ்ச்சி தெரிவித்த கணேஷ், சக்தி இசைக்குழுவிற்கு நன்றி தெரிவித்தார். "ஜாகிர் ஹுசைன் மற்றும் ஜான் மெக்லாலின் போன்ற மேதைகளோடு இணைந்து இந்திய பாரம்பரிய இசையை உலகளாவிய ரசிகர்களுக்காக நாங்கள் தொடர்ந்து வழங்கி வருகிறோம் எங்கள் முயற்சிகளுக்கு மகுடம் வைத்தது போன்று கிராமி விருது கிடைத்துள்ளது," என்றார் அவர்.

இசைக் கலைஞர், இசையமைப்பாளர், கல்வியாளர், ஈஸ்வரா மியூசிக் பள்ளியின் நிறுவனர் என்று பன்முகம் கொண்ட கணேஷ் ராஜகோபாலன் தொடர்ந்து பேசுகையில்: "கிராமி விருது பெற்ற குழுவில் ஷங்கர் மகாதேவன், செல்வகணேஷ் மற்றும் நான் என தமிழகத்தை சேர்ந்த மூன்று பேர் உள்ளோம். இது எங்களுக்கு மட்டுமில்லாது தமிழகம் மற்றும் இந்தியாவுக்கே பெருமை. ஜாகிர் ஹுசைன் மற்றும் ஜான் மெக்லாலின் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கும் அதே வேளையில், எனது இசைப் பயணத்தில் உறுதுணையாக இருந்த அனைத்து கலைஞர்கள், ஊடகங்கள் மற்றும் ரசிகர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்," என்று தெரிவித்தார்.

இசை எல்லா எல்லைகளுக்கும் அப்பாற்பட்டது என்பதை வலியுறுத்திய அவர், பல்வேறு இடங்களில் இருந்த சக்தி இசைக்குழுவின் கலைஞர்களால் கோவிட் காலகட்டத்தின் போது கிராமி விருது பெற்ற ஆல்பமான 'திஸ் மொமென்ட்' உருவாக்கப்பட்டது என்று கூறினார்.

# ரெயின்போ சில்ட்ரென்‘ஸ் ஹாஸ்பிடல் சென்னையில் அதன் 3வது மருத்துவமனையின் சமூகக் கூடுகையை அண்ணாநகரில் ஏற்பாடு செய்துள்ளது

சென்னை, 25 பிப் 2024: குழந்தைகள், மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவத்தில் நிபுணத்துவம் பெற்ற ஒரு புகழ்பெற்ற மருத்துவமனைகளின் சங்கிலியான ரெயின்போ சில்ட்ரென்'ஸ் ஹாஸ்பிடல் மற்றும் பர்த்ரைட் பை ரெயின்போ ஆஸ்பிடல், சென்னையில் தனது 3 வது மருத்துவமனையின் ஒரு சமூகக் கூடுகையை அண்ணாநகரில் ஏற்பாடு செய்துள்ளது. மருத்துவர்கள், நலம் விரும்பிகள், நோயாளிகள் இளம் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் இந்த நட்சத்திர வசதியை சுற்றிப் பார்ப்பதற்காக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 24 வருட பாரம்பரியத்துடன், இந்த புதிய வசதியானது, குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு விதிவிலக்கான உடல்நல சேவைகளை வழங்குவதற்கான அதன் உறுதிப்பாட்டை மேலும் உறுதிப்படுத்துகின்ற குழுமத்தின் 19வது மருத்துவமனையை குறிக்கிறது. இந்த குழுமம் தற்போது சென்னையில் கிண்டி மற்றும் சோழிங்கநல்லூரில் இரண்டு மருத்துவமனைகளை நடத்தி வருகிறது. சமீபத்திய கூடுதலாக, அண்ணா நகரில் உள்ள 80 படுக்கைகள் கொண்ட ஒரு நவீன குழந்தைகள் மற்றும் மகப்பேறு மருத்துவமனையானது, சென்னையில் உள்ள ரெயின்போ இன் நெட்வொர்க்கில் முக்கிய பங்கு வகிக்கின்ற ஒரு குறிப்பிடத்தக்க ஸ்போக் மருத்துவமனையாக செயல்படும். இந்த மருத்துவமனையானது, குழந்தை மருத்துவம் மற்றும் மகப்பேறு மருத்துவம், வெளிநோயாளர் சேவைகள் மற்றும் நிலை 3 புதிதாய்ப் பிறந்த குழந்தை மற்றும் குழந்தை தீவிர சிகிச்சை சேவைகள் ஆகியவற்றில் 24வீ7 ஆலோசகர் தலைமையிலான அவசர சிகிச்சை அடங்கிய முழுமையான குழந்தை மருத்துவ மற்றும் மகப்பேறியல் சேவைகளை வழங்கும். இந்த ஆண்டு மார்ச் முதல் வாரத்தில் இந்த மருத்துவமனை தனது செயல்பாடுகளை தொடங்க உள்ளது.



அனுபவம் வாய்ந்த மற்றும் திறமையான ஆலோசகர்களின் கீழ் சிறந்த பராமரிப்பை வழங்கும் இந்த பெரிய தனிப்பயனாக கட்டமைக்கப்பட்ட மருத்துவமனை கிண்டியில் உள்ள தற்போதைய ஹப் மருத்துவமனையில் வழங்கப்படும் சேவைகளை நிறைவு செய்யும். நிவீகூஷீ மீ'லீஸிவீரீலீமீ, மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத்துடன் கூடுதலாக ரெயின்போ இன் உடல்நலப் பராமரிப்புக்கான அனைத்தையும் உள்ளடக்கிய அணுகுமுறையை வலுப்படுத்துகின்ற கருவுறுதல் பராமரிப்பையும் வழங்கும். அதன் விதிவிலக்கான நோயாளி பராமரிப்புக்காக புகழ்பெற்ற ரெயின்போ சில்ட்ரன்'ஸ் ஹாஸ்பிடல், மேம்பட்ட கட்டமைப்பு மற்றும் 24 மணிநேர ஆலோசகர் தலைமையிலான சேவைகளைக் கொண்டுள்ளது. இந்த குழுமத்தின் சமீபத்திய முயற்சியானது, சென்னை மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் ஒரு பகுதியின் பெரிய மக்கள்தொகைக்கு உயர்தர உடல்நல சேவையை அணுகுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ரெயின்போ சில்ட்ரன்'ஸ் ஹாஸ்பிடல் இன் தலைவரும் நிர்வாக இயக்குநருமான டாக்டர் ரமேஷ் கஞ்சர்லா தனது உற்சாகத்தை வெளிப்படுத்திக் கூறுகையில், “சென்னையில் எங்கள் 3வது மருத்துவமனை திறக்கப்பட்டதன் மூலம், சென்னையில் வசிப்பவர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த சுகாதார சேவைகளை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த பிராண்ட் நெறிமுறைகளுக்கு ஏற்ப, குழந்தைகளை மையப்படுத்திய சூழல் மற்றும் குழந்தைகளை ஈர்க்கும் வகையில் மனதிற்கிதமான உட்புறங்களுடன் இந்த வசதி வடிவமைக்கப்பட்டுள்ளது. பரந்த உள்ளடக்கம் மற்றும் சிறந்த அணுகலை வழங்க இந்த மருத்துவமனை எங்கள் ஹப் மற்றும் ஸ்போக் மாதிரியை மேலும் அதிகரிக்கும். தேவையின் அடிப்படையில், நகரத்தில் அதிகமான ஸ்போக்குகளை நாங்கள் திட்டமிடுவோம். அதிநவீன, இரக்கமுள்ள கவனிப்பை வழங்குவதற்கான எங்கள் அர்ப்பணிப்பு சீராக இருக்கிறது மேலும் இந்த பிராந்தியத்தில் உள்ள குடும்பங்களின் வாழ்க்கையில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்த நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம் மேலும் இந்த ஆண்டு மார்ச் முதல் வாரத்தில் செயல்பாடுகளை தொடங்க நாங்கள் திட்டமிட்டுள்ளோம்."என்றார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

ஞாயிற்றுக்கிழமை,
பிப்ரவரி 25, 2024

# நியாயமான மற்றும் பொறுப்பான கேமிங்கிற்கான தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் ரம்மிகல்சர்க்கான 'டிரஸ்ட் ரிப்போர்ட்டை' கேம்ஸ்கிராப்ட் வெளியிட்டுள்ளது

*சென்னை, 25 பிப் 2024:* ஒரு அற்புதமான மற்றும் முன்னோடித்துவ நடவடிக்கையாக, இந்தியாவின் முன்னணி உள்நாட்டு திறமைசார்ந்த ஆன்லைன் கேம்ஸ் நிறுவனமான கேம்ஸ்கிராப்ட், அதன் முக்கிய ஆன்லைன் ரம்மி தளமான ரம்மிகல்சர்க்கான டிரஸ்ட் ரிப்போர்ட்டை வெளியிட்டுள்ளது. இது, தளத்தின் நியாயமான நடைமுறைகள், பிளேயர் ஆதரவு நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு செயலாக்கங்கள் ஆகியவை குறித்த ஒரு விரிவான பார்வையை வழங்குகிறது. இந்தத் தனித்துவமான அறிக்கையானது தளத்தின் பல்வேறு வகைகளில் விளையாட்டின் புள்ளிவிவரங்களை வழங்குகிறது மற்றும் பயனர் குறைகளை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விவரிக்கிறது.

அதன் ரம்மிகல்சர் இணையதளத்தில் மாதாந்திர அடிப்படையில் சிறப்பான நுண்ணறிவுகளை வழங்கும் இந்த அறிக்கையை வெளியிட உறுதிபூண்டுள்ளது.

திறன் நார்ந்த உண்மையான பணம்கொண்ட கேமிங் (ஆர் எம் ஜி) துறையில் முன்னணி நிறுவனமாக, ரம்மிகல்சர் இன் அறிக்கை மிகவும் முக்கியமானது மற்றும் துறையின் வாய்ப்புகளுக்கு பொருத்தமானது. ஆர் எம் ஜி நிறுவனங்கள் பல ஆண்டுகளாக ஒழுங்குமுறை நிச்சயமற்ற தன்மை, கடுமையான சந்தை நிலவரங்கள் மற்றும் எதிர்மறை உணர்வுகளின் விளைவாக பயனர் நம்பிக்கையை குறைத்துக்கொண்டிருக்கும் நிலையில், இந்த டிரஸ்ட் ரிப்போர்ட்டானது பரந்துபட்ட ஆன்லைன் விளையாட்டுகள் சமூகம் மீதான பொது நம்பிக்கையை உருவாக்குவதற்கும் கட்டுக்கதைகளை அகற்றுவதற்கும் ஒரு படியாகும். ரம்மிகல்சர்களின் பயனர் சேவைகள்- பயனர்களுக்கு விளையாட்டு நுண்ணறிவுகளை வழங்குவது உட்பட, வீரர்களாக தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள உதவுகிறது - நாட்டின் நம்பகமான ரம்மி செயலியாக பிராண்டின் அந்தஸ்தை உயர்த்துகிறது. இந்த வலுவான வாடிக்கையாளர் ஆதரவு அம்சம் பயனர் அனுபவத்திற்கு முன்னுரிமை அளிக்கும் சமமான வலுவான பின்தள செயல்பாடுகளால் வலுப்படுத்தப்படுகிறது. கடுமையான பிளேயர் டேபிள் நெறிமுறைகள் முதல் உள்ளுணர்வு அல்காரிதம்கள் வரை, பிளேயர்களுக்கு நியாயமற்ற நன்மைகள் இல்லை என்பதை உறுதிசெய்யும், தளமானது தொழில்துறையின் முன்னணி நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை முடிந்தவரை வெளிப்படையாகப் பயன்படுத்துகிறது. ரம்மிகல்சர் ஆனது நியாயமான விளையாட்டு மீறல்களுக்கு பூஜ்ஜிய சகிப்புத்தன்மை அணுகுமுறையைக் கொண்டுள்ளது, மீறல்களைக் கண்டறிந்து குற்றவாளிகளை நிரந்தரமாகத் தடைசெய்வதற்கு ஏமாற்று எதிர்ப்பு வழிமுறைகளைப் பயன்படுத்துகிறது.

கேம்ஸ்கிராப்ட்டின் இணை நிறுவனர் உறுப்பினர் திவ்யா அலோக் அவர்கள், "எங்கள் டிரஸ்ட் ரிப்போர்ட் பயனர்களுடன் நாங்கள் வைத்திருக்கும் உறுதியான உறவை அங்கீகரிப்பதாகும், அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இதன் வெளியீட்டின் மூலம், திறமையான ஆன்லைன் கேமிங்கைச் சுற்றி வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவோம், நாங்கள் இயங்கும் அமைப்புகள், செயல்முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களில் நம்பிக்கையை உருவாக்குவோம். எங்கள் தயாரிப்புகளைப் பயன்படுத்தும் மக்களுக்கு அவர்களின் நம்பிக்கையை மதிப்பதாகவும், சிறந்த அனுபவத்தை அவர்களுக்கு வழங்குவதாகவும் உறுதியளிப்பது இந்தத் துறையின் எதிர்காலத்திற்கு இன்றியமையாததாகும்" என்று கூறினார்.

# எஸ் எம் எஃப் ஜி இந்தியா கிரெடிட் நிறுவனம், 6 வது பசுவிகாஸ் தினத்தில் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கிறது, பால் பண்ணை தொழில் செய்யும் பெண்களை கவுரவிக்கிறது



*சென்னை, 25 பிப் 2024:* இந்தியாவின் முன்னணி என் பி எஃப் சிக்களில் ஒன்றான எஸ் எம் எஃப் ஜி இந்தியா கிரெடிட் கோ. லிமிடெட் (முன்பு ஃபுல்லர்டன் இந்தியா கிரெடிட் கோ. லிமிடெட்), தங்களின் நாடு முழுவதும் நடத்தப்பட்ட மிகப்பெரிய ஒரு நாள் கால்நடை பராமரிப்பு முகாமான 6 வது பசுவிகாஸ் தினத்தை (பி வி டி) நடத்தியது. இந்த முகாம்கள் 14 மாநிலங்களில் உள்ள 460 க்கும் மேற்பட்ட இடங்களில் ஒரே நேரத்தில் நடத்தப்பட்டன மேலும் 1 இலட்சத்துக்கும் அதிகமான கால்நடைகளுக்கு அத்தியாவசிய சுகாதார சேவைகள் வழங்கப்பட்டன. இந்தியாவில், 8 கோடிக்கும் அதிகமான குடும்பங்கள் பால் துறையுடன் நேரடியாக தொடர்புடையவை மற்றும் 70% தொழிலாளர்களில் பெண்கள் அடங்குகின்றனர். இந்த பெண்களின் முயற்சிகளை நினைவுகூரும் வகையில், 6 வது பசுவிகாஸ் தினம் 'பால் பண்ணைத் தொழிலில் பெண்கள்' என கொண்டாடப்பட்டது. இந்த முன்முயற்சியானது, ஈ எஸ் ஜி கட்டமைப்பிற்குள் உள்ள, பாலின பன்முகத்தன்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற மற்றும் சமூக மேம்பாட்டிற்கு ஊக்கமளிக்கின்ற 'சமூக' அம்சத்தை பிரதிபலிக்கிறது. 600 நகரங்கள் மற்றும் 65,000க்கும் மேற்பட்ட கிராமங்களில் இந்தியா முழுவதும் உள்ள வாடிக்கையாளர் தளத்தை அவர்கள் பூர்த்தி செய்வதால், இந்த நிறுவனத்தின் பலதரப்பட்ட பணியாளர்கள் குழு ஒரு மூலோபாய உதவியாளர் ஆக இருக்கிறது. கடன் வழியாக கனவுகளுக்கு நிதியளிப்பதன் மூலமும், அவர்கள் செயல்படும் உள்ளூர் சமூகங்களில் சிறந்த வாழ்வாதாரத்திற்காக கிராமப்புற இந்தியாவை மேம்படுத்துவதன் மூலமும் ஒரு ஒட்டுமொத்த உள்ளடக்கிய சுற்றுச்சூழல் அமைப்பை உறுதி செய்வதில் அவர்களின் கவனம் உள்ளது

கால்நடை பராமரிப்பு தவிர, எஸ் எம் எஃப் ஜி இந்தியா கிரெடிட், 2024 பிப்ரவரி 4 முதல் பிப்ரவரி 10 வரை நாடு முழுவதும் உள்ள சமூகத்திற்காக, 30,000 க்கும் மேற்பட்ட மக்கள் பயனடைகின்ற வகையில் 300 க்கும் மேற்பட்ட உடல்நல பாதுகாப்பு முகாம்களையும் ஏற்பாடு செய்தது. 6 வது பசு விகாஸ் தினம் 1,25,000 க்கும் மேற்பட்ட மக்களின் வாழ்க்கைகளில் முழுவதும் சென்றடைந்து விளைவு ஏற்படுத்தியது.

பசுவிகாஸ் தினமானது, இந்த முயற்சியை முன்னெடுப்பதற்காக ஒரே நாளில் தாமாக முன்வந்து ஒன்றிணைந்த நாடு முழுவதும் உள்ள 4000-க்கும் மேற்பட்ட ஊழியர்களின் தீவிரமான பங்கேற்பையும் கண்டது.

நிறுவனத்தின் சமூக முன்முயற்சிகள் பற்றி பேசிய எஸ் எம் எஃப் ஜி இந்தியா கிரெடிட் இன் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குனர் திரு. ஷாந்தனு மித்ரா, "எங்கள் கிராமப்புற வாடிக்கையாளர்களில் 90% க்கும் அதிகமானோர் பெண்களாக இருக்கிறார்கள். எங்கள் வாடிக்கையாளர்களில் பலர் அவர்களுக்கு பெரிய வருமான ஆதாரமாக உள்ள கால்நடைகளை வாங்குவதற்கு கடன் வாங்குகிறார்கள். எங்கள் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் மாற்றத்திற்கான ஊக்கியாக செயல்படுகின்றன மற்றும் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்ற மற்றும் வருமான வழிகளை உயர்த்துகின்ற வகையில் கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன, கால்நடை நலனைத் தாண்டி, நாங்கள் சேவை செய்யும் சமூகங்களின் முழுமையான நல்வாழ்வுக்கு பங்களிக்கின்ற திறன் மேம்பாடு மற்றும் நிதி கல்வியறிவை தீவிரமாக ஊக்குவிக்கின்றோம். எஸ் எம் எஃப் ஜி இந்தியா கிரெடிட் இல், புதுமையான மற்றும் நிலையான சமூக-பொருளாதார முன்முயற்சிகள் மூலம் பின்தங்கிய சமூகங்களில் உள்ளடங்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம் எங்கள் வாடிக்கையாளர்களுடன் ஒரு வலுவான தொடர்பை ஏற்படுத்த நாங்கள் அர்ப்பணித்துள்ளோம்." என்று கூறினார்.

பசுவிகாஸ் தினம் பற்றி கருத்து தெரிவிக்கையில், எஸ் எம் எஃப் ஜி இந்தியா கிரெடிட் இன் தலைமை இயக்க அதிகாரி திரு சுவாமிநாதன் சுப்ரமணியன், "எஸ் எம் எஃப் ஜி இந்தியா கிரெடிட் இல், கிராமப்புற மேம்பாட்டிற்கான எங்கள் அர்ப்பணிப்பு மற்றும் வலுவான சமூக முன்முயற்சிகளை வெற்றி பெறுவதற்கான எங்கள் நோக்கத்தில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். ஒரு முன்னணி கடன் வழங்குநராக, எங்கள் சமூக நலன் சார்ந்த செயல்பாடுகள், உள்ளடக்கிய திட்டங்கள் மற்றும் ஒற்றுமையுடன் செயல்படும் ஒரு பலதரப்பட்ட பணியாளர்கள் மூலம் ஈ எஸ் ஜி இன் 'சமூக' அம்சத்தைப் பயன்படுத்த நாங்கள் விரும்புகிறோம். இதைக் கருத்தில் கொண்டு, பசுவிகாஸ் தினம் குறிப்பாக கிராமப்புறங்களில் கால்நடைகள் மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் தனிப்பட்ட சுகாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு கால்நடை உரிமையாளர்களின் அபிலாஷைகளை வலுப்படுத்துகிறது மற்றும் கால்நடை உற்பத்தியை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது, தொடர்ந்து வீட்டு வருமானத்தை உயர்த்துகிறது. எங்களின் கவனம் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமூகத்திற்கும் அதிகாரமளித்தல் மற்றும் மேம்பாடு ஆகியவற்றை எளிதாக்குகின்ற வகையில் பின்தங்கியவர்களுக்கு ஆதரவை நிலையாக விரிவுபடுத்துவதில் இருக்கும்." என்று கூறினார். பசுவிகாஸ் தினம், பால் பண்ணை துறையில் ஒரு நேர்மறையான மாற்றத்தை உருவாக்குவதற்கும் நிலையான நடைமுறைகளை வளர்ப்பதற்கும் நிறுவனத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. இந்த ஆண்டு, வேர்ல்டு ரெகார்ட்ஸ் யூனியன் உடன் நாடு முழுவதும் நடத்தப்பட்ட மிகப்பெரிய ஒரு நாள் கால்நடை பராமரிப்பு முகாம்களுக்கான ஒரு புதிய சாதனையை இந்த நிறுவனம் படைத்துள்ளது. கடந்த சில பதிப்புகளில், பி வி டி ஆனது 2015 ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்ட மிகப்பெரிய ஒற்றை நாள் கால்நடை பராமரிப்பு முகாமிற்காக லிம்கா புத்தகத்தில் இடம்பெற்றது, 2018 ஆம் ஆண்டில் உலகின் மிகப்பெரிய ஒற்றை நாள் கால்நடை பராமரிப்பு முகாமாக பெஸ்ட் ஆஃப் இந்தியா ரெக்கார்ட்ஸ் மற்றும் 2019 இல் மிகப்பெரிய கால்நடை பராமரிப்பு முகாமிற்காக வேர்ல்டு புக்ஸ் ஆஃப் ரெக்கார்ட்ஸ் இல் இடம்பெற்றது.

# இண்டஸ் டவர்ஸ் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி மெட்ராஸுடன் இணைந்து ஆர் & டி ஆய்வகங்களைத் தொடங்கியுள்ளது

*சென்னை, 25 பிப் 2024:* இண்டஸ் டவர்ஸ் லிமிடெட், சென்னையின் இந்திய தொழில்நுட்பக் கழகத்துடன் இணைந்து, ஐ ஐ டி மெட்ராஸ் வளாகத்தில் பசுமை ஹைட்ரஜன் மற்றும் பேட்டரி மேலாண்மை அமைப்பை மையமாகக் கொண்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகங்களை சமீபத்தில் அறிமுகப்படுத்தியது. இந்த ஆய்வகங்களை, இண்டஸ் டவர்ஸின் தலைமை ஒழுங்குமுறை அதிகாரி மற்றும் சிஎஸ்ஆர் திரு மனோஜ் குமார் சிங், பேராசிரியர் ரகுநாதன் ரெங்கசாமி, டீன் குளோபல் என்கேஜ்மென்ட் மற்றும் பேராசிரியர் ஆர். சாரதி, டீன், ஐஐடி மெட்ராஸ் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்.

இதன் நோக்கம் சூரிய சக்தியில் இயங்கும் ஹைட்ரஜன் உற்பத்தி அமைப்பை உருவாக்குவதே ஆகும், மற்றும் எரிபொருள் செல்களைப் பயன்படுத்தி சுமைகளை ஆற்றுவதாகும். இதற்கு இணையாக, பேட்டரி மேலாண்மை அமைப்பு (பி எம் எஸ்) வளர்ச்சியுடன் கூடிய பேட்டரி பொறியியல் ஆய்வகம் பல்வேறு பயன்பாடுகளில் பாதுகாப்பான மற்றும் நம்பகமான பேட்டரி செயல்திறனை உறுதி செய்கிறது. இந்தத் திட்டம் பேட்டரி பேக், ஆயுட்காலம் கணிப்பு மற்றும் பயனுள்ள வெப்பக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கான துல்லியமான நிலை மதிப்பீடுகளை பிரதிபலிக்கிறது, இது தொழிற்சாலைகள் முழுவதும் ரிச்சார்ஜபிள் லி-அயன் பேட்டரிகளின் பரவலான பயன்பாட்டை வழங்குகிறது.

இண்டஸ் டவர்ஸின் தலைமை ஒழுங்குமுறை அதிகாரி மற்றும் சிஎஸ்ஆர் மனோஜ் குமார் சிங் கூறுகையில், "சிந்து டவர்ஸின் கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு, புதைபடிவ எரிபொருட்களை விட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கலவையின் விகிதத்தை அதிகப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. எங்களின் முதன்மையான சி எஸ் ஆர் திட்டமான பிரகதியின் கீழ் புதிய ஆற்றல் ஆதாரங்களை நோக்கி ஆர் & டிக்கு ஆதரவளிக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். ஐஐடிஎம் உடனான எங்கள் சி எஸ் ஆர் ஈடுபாட்டின் கீழ் பசுமை ஹைட்ரஜன் மைக்ரோ கிரிட் மற்றும் பேட்டரி இன்ஜினியரிங் ஆய்வகத்தின் திறப்பு விழா குறித்து இன்று நாங்கள் மிகவும் உற்சாகமாக இருக்கிறோம். எரிசக்தி சுதந்திரத்தை நோக்கிய இந்தியாவின் பயணத்தில் இது ஒரு புதிய தொலைநோக்கு பாதையை அமைக்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்த ஆர் & டி முன்முயற்சிகளின் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தி, பேராசிரியர் மகேஷ் பஞ்சாக்னுலா, முன்னாள் மாணவர்கள் மற்றும் கார்ப்பரேட் உறவுகள், "ஐ ஐ டி மெட்ராஸில் உள்ள இந்த அதிநவீன ஆய்வகங்கள் மிகவும் நிலையான எதிர்காலத்தை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க படியை பிரதிபலிக்கின்றன. கிரீன் ஹைட்ரஜன் மைக்ரோகிரிட் லேப் மற்றும் பேட்டரி இன்ஜினியரிங் ரிசர்ச் லேப் அமைக்க ஐஐடிஎம்-க்கு ஆதரவளித்த இண்டஸ் டவர்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன் என்று கூறினார்.

ஐஐடி மெட்ராஸின் ஆசிரிய உறுப்பினர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் தொடர்ச்சியான முயற்சியால் ஆய்வகங்கள் வெற்றிகரமாக நிறுவப்பட்டுள்ளன.

# வீரா' பாடல் வெளியீடு : நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும் இறுதிப்போரைப் பற்றி ஒரு பாடல்

*சென்னை, 25 பிப் 2024:* தொலைநோக்கு பார்வையாளரான அமிர்தராஜ் செல்வராஜால் உருவாக்கப்பட்ட காமிக் புத்தகமான "எண்ட்வார்ஸ்" தமிழ்த் தழுவலில் இருந்து ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட புதிய பாடல் "வீரா" வெளியீட்டை அறிவிப்பதில் குயின்ஸ்லாந்து ஸ்டுடியோஸ் மகிழ்ச்சியடைந்துள்ளது. "இறுதிப்போர்" எனும் பெயரில் வெளிவந்துள்ள இந்தத் தழுவலின் மையத்தில் இருக்கும் வீரத்தின் கதையை உயிர்ப்பித்து, பாடல் யூடியூப் இல் வெளியாகிறது. இந்தப் பாடல் அண்மையில் நடந்த சென்னை காமிக் கான் நிகழ்வில் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் மற்றும் சென்னை காமிக்




ரசிகர்கள் முன்னிலையில் வெளியிடப்பட்டது. பாடலாசிரியர் மதன் கார்க்கியால் எழுதப்பட்டு, ஜெரார்ட் ஃபெலிக்ஸின் இசையமைப்பில் அமைக்கப்பட்ட "வீரா",

காமிக் புத்தகத்துகாக உருவாக்கப்பட ஒரு பாடலாகும். இது ஒரு போர்க்குரல், தமிழ்ப் பொழுதுபோக்கு நிலப்பரப்பில் ஒரு புதிய சூப்பர் ஹீரோவின் எழுச்சியைப் பற்றி பேசும் பாடல் இது. குயின்ஸ்லாந்து ஸ்டுடியோஸ் தயாரித்த "எண்ட்வார்ஸ்" எனும் காமிக் கதையைத் தமிழில் "இறுதிப்போர்" என்று தழுவி மதன் கார்க்கி எழுதியுள்ளார். அதன் கதைக்களம் மற்றும் தெளிவான கதாபாத்திரங்கள் மூலம் ரசிகர்களின் கற்பனையை ஏற்கனவே கைப்பற்றியுள்ளது. இயக்குனர் விக்டர் ஜெயராஜின் படைப்புப் பார்வை இந்தத் திட்டத்தை உயிர்ப்பிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது, சௌரப்பின் வண்ணமயமான ஓவியங்களும் பா ஸ்டுடியோவால் உருவாக்கப்பட்ட ஒரு அற்புதமான பாடல் வீடியோவும், "வீரா" காதுகளுக்கும் கண்களுக்கும் விருந்தாக அமைந்த்துள்ளது. "வீரா" இப்போது யூ டியூப் இல் ஸ்ட்ரீமிங்கிற்கு கிடைக்கிறது. அந்த வகை ரசிகர்களும் இசை ஆர்வலர்களும் பாடலை அனுபவிக்க அழைக்கப்படுகிறார்கள்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# நெஸ்லே ஹெல்த் சயின்ஸ் துடிப்பான மில்லினியல்களுக்காக ரிசோர்ஸ் ஆக்டிவ் என்னும் அதன் 'நியூ-எட்ஜ்' ஊட்டச்சத்து தீர்வை அறிமுகப்படுத்தியுள்ளது




சென்னை, 25 பிப் 2024: அனைவரின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தும் உணவின் ஆற்றலை வழங்கிடும் தனது நோக்கத்திற்கு இணங்க, நெஸ்லே இந்தியா, துடிப்பாக இருக்கும் மில்லினியல்கள் ஆரோக்கியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட ரிசோர்ஸ் ஆக்டிவ் என்னும் பல நன்மைகள் கொண்ட, உயர் புரதச் சப்ளிமெண்ட்டை அறிமுகப்படுத்தியுள்ளது. . அதன் தனித்துவமான 'நியூ எட்ஜ் ஃபார்முலா' மூலம், ரிசோர்ஸ் ஆக்டிவ் தசைகளுக்கான உயர்தர புரதங்களையும், எலும்பு ஆரோக்கியத்திற்காக செறிவூட்டப்பட்ட கால்சியம் மற்றும் வைட்டமின்-டி மற்றும் சரும ஆரோக்கியத்திற்கான ஹைஹலூரோனேட்டையும் கொண்டுள்ளது. நார்ச்சத்து மற்றும் நோயெதிர்ப்பு சத்துகளும் இதில் உள்ளன. ரிசோர்ஸ் ஆக்டிவ், சப்ளிமெண்ட் மூலம் மில்லினியல்களின் ஊட்டச்சத்து தேவை இடைவெளிகளை நிவர்த்தி செய்ய முயல்கிறது.

வேகமாக வளர்ந்து வரும் புரோட்டீன் சப்ளிமெண்ட் சந்தை இருந்தபோதிலும், தனிநபர்களுக்காக வடிவமைக்கப்பட்ட சலுகைகளின் தேவை உள்ளது. 30 வயதிற்குப் பிறகு, தசை நிறை விருப்பமின்றி இழப்பு ஏற்படுகிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது எலும்பு அடர்த்தி குறைதல், திசு முறிவு மற்றும் தோல் நீரேற்றம் மற்றும் நெகிழ்ச்சி இழப்பு போன்ற வயதான அறிகுறிகளுக்கும் வழிவகுக்கிறது. ரிசோர்ஸ் ஆக்டிவ் இந்த வயதினரின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்ய தனிப்பயனாக்கப்பட்டுள்ளது, தசை ஆரோக்கியம், ஆற்றல், எலும்பு ஆரோக்கியம் மற்றும் தோல் ஆரோக்கியத்திற்கு உதவுகிறது. ருசியான வெண்ணிலா பிஸ்கட் சுவையில் தண்ணீர் அல்லது பாலுடன் ரிசோர்ஸ் ஆக்டிவ்ஐ நுகர்வோர் எடுத்துக்கொள்ளலாம்.

வெளியீட்டு விழாவில் இதுகுறித்துப் பேசிய, நெஸ்லே இந்தியாவின் தலைவரும் நிர்வாக இயக்குனருமான திரு.சுரேஷ் நாராயணன், அவர்கள், "சக்திவாய்ந்த பிராண்டுகள் மற்றும் தயாரிப்புகள் மூலம் தனது நுகர்வோரின் வாழ்க்கைக்கு மதிப்பு சேர்க்க நெஸ்லே இந்தியா தொடர்ச்சியான பயணத்தை மேற்கொண்டு வருகிறது. மில்லினியல்கள் உட்பட துடிப்பாக இருக்கும் பெரியவர்களுக்காக, ரிசோர்ஸ் ஆக்டிவ்ஐ அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ரிசோர்ஸ் ஆக்டிவ் என்பது நெஸ்லேவின் தரம் மற்றும் பாதுகாப்பின் உத்திரவாதத்தால் ஆதரிக்கப்படும் விரிவான ஆராய்ச்சியின் வெளிப்பாடாகும். சுறுசுறுப்பான மில்லினியல்களின் ஊட்டச்சத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்து, அவர்கள் சுறுசுறுப்பான வாழ்க்கையை நடத்துவதற்கு பிராண்ட் உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்று கூறினார்.

ரிசோர்ஸ் ஆக்டிவ், டெல்லி என் சி ஆர், கொல்கத்தா, மும்பை, புனே, ஹைதராபாத், பெங்களூரு, சென்னை, கோயம்புத்தூர், கொச்சி, கோழிக்கோடு மற்றும் திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் உள்ள தேசிய மருந்தகங்கள் மற்றும் உள்ளூர் வேதியியலாளர்களில் 11 நகரங்களில் இணையவழி மற்றும் 11 நகரங்களில் கிடைக்கும்.

ஊட்டச்சத்து அறிவியலில் நெஸ்லே ஹெல்த் சயின்ஸ் உலகளாவிய முன்னணியில் உள்ளது. நுகர்வோர், நோயாளிகள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பில் அதன் பங்குதாரர்களுக்கான சுகாதார நிர்வாகத்தின் போக்கை மாற்ற ஊட்டச்சத்தின் சிகிச்சைப் பங்கை மேம்படுத்துவதில் இது கவனம் செலுத்துகிறது. முக்கிய தயாரிப்புகளில் ரிசோர்ஸ் ஹைபுரோட்டீன், பெப்டாமின், ஆப்டிஃபாஸ்ட், ரிசோர்ஸ் டயாபெடிக், ரிசோர்ஸ் ஃபைபர் சாய்ஸ், திக்கன்அப் கிளியர், ரிசோர்ஸ் ரீனல் மற்றும் ரிசோர்ஸ் டயாலிசிஸ் ஆகியவை அடங்கும். நெஸ்லே ஹெல்த் சயின்ஸ், விழிப்புணர்வு மற்றும் கல்விக்காக இந்தியா முழுவதும் உள்ள சுகாதார நிபுணர்களுடன் ஈடுபடும் பிரத்யேக மருத்துவ நிபுணர்களின் குழுவையும் கொண்டுள்ளது.

# ஜனவரி 2024 இல், டாடா அசெட் மேனேஜ்மெண்ட் இன் பங்கு மற்றும் ஆர்பிட்ரேஜ் ஃபண்ட்களில் ரூபாய் 1,907 கோடியின் கணிசமான நிகர உள் வரத்துகளுக்கு தமிழ்நாடு 6% பங்களித்தது

சென்னை, 25 பிப் 2024: அஸோஸியேஷன் ஆஃப் மியூச்சுவல் ஃபண்ட்ஸ் இன் இந்தியா (ஏ எம் எஃப் ஐ) வெளியிட்ட சமீபத்திய தரவுகளின்படி, ஜனவரி 2024 இல் ஈக்விட்டி மியூச்சுவல் ஃபண்டுகள் ரூ. 21,780.56 கோடியின் ஒரு நிகர வரத்தைக் கண்டுள்ளன. சமீபத்தில் வெளியிடப்பட்ட இந்த தரவு, ஜனவரி 2024 இல் முதலீட்டாளர்களின் இந்த முதலீட்டு வழிக்கான விருப்பத்தை உறுதிப்படுத்துகின்ற ஈக்விட்டி மியூச்சுவல் ஃபண்ட் பிரிவின் தொடர்ச்சியான வளர்ச்சியை முக்கியப்படுத்துகிறது. ஒட்டுமொத்தமாக, இந்தியாவில் உள்ள மியூச்சுவல் ஃபண்ட் துறையானது, அனைத்து திட்டங்களிலும் மொத்த நிர்வாகத்தின் கீழ் (ஏ யூ எம்) சொத்துக்கள் ரூ. 52.89 இலட்சம் கோடியைப் பதிவு செய்துள்ளது.

ஈக்விட்டி மியூச்சுவல் ஃபண்ட் வகையை பிரித்து, மிட் கேப் பிரிவில் கணிசமான அளவு 2,061 கோடி ரூபாய் வரத்தைக் கண்ட அதே வேளையில் ஸ்மால்-கேப் ஃபண்டுகள் ரூபாய் 3,527 கோடியை ஈர்த்தது. நிகர வரத்துகள் முறையே 4,804.7 கோடி மற்றும் ரூபாய் 2,447 கோடி ஆகியவற்றுடன், துறைசார்/கருப்பொருள் நிதிகள் மற்றும் ஃப்ளெக்ஸி-கேப் வகைகளும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்தன. இந்த வகைகளின் இந்த நேர்மறையான போக்கு முதலீட்டாளர்களின் பரந்த அளவிலான ஆர்வங்களை முக்கியப்படுத்திக்காட்டுகிறது.

ஜனவரி 2024 இல் 7.92 கோடி எஸ் ஐ பி கணக்குகள் மூலம் 18,838 கோடி ரூபாய் சேகரிக்கப்பட்டதன் மூலம் மியூச்சுவல் ஃபண்ட்களுக்கான நீடித்த உற்சாகம் ஒரு குறிப்பிடத்தக்க போக்காக்க இருக்கிறது.

ஜனவரி 2024 இல் ஈக்விட்டி மற்றும் ஆர்பிட்ரேஜ் ஃபண்டுகளில் ரூபாய் 1,907 கோடியின் நிகர வரத்துகளைப் பதிவு செய்து, டாடா அசெட் மேனேஜ்மென்ட் கவனத்தை ஈர்த்தது, சுவாரஸ்யமாக, இந்த தொகையில் தமிழ்நாடு 6% பங்களித்தது. 2023 டிசம்பரில் கடன் நிதிகள் ஒரு பிரிவாக, ரூ. 76,469 கோடி நிகர வரத்தைக் கண்டாலும், டாடா அசெட் மேனேஜ்மென்ட் இன் டெப்ட் மியூச்சுவல் ஃபண்ட்கள் 2024 ஜனவரியில் 2,678 கோடி ரூபாயை நிகர பங்களிப்பைக் கண்டது. "ஸ்மால் மற்றும் மிட் கேப் ஃபண்டுகள் ஆகிய இரண்டும் கடந்த சில மாதங்களில் முதலீட்டாளர்களின் தொடர்ச்சியான ஆர்வத்தைக் கண்டன. உண்மையில் மற்ற வகைகளுடன் ஒப்பிடுகையில் இந்த நிகர வரத்து நிலையானதாகவும் மற்றும் கணிசமானதாகவும் இருந்து வருகிறது. மிட் மற்றும் ஸ்மால் கேப் பிரிவுகளின் மதிப்பீடு தற்போது சற்று உயர்த்தப்பட்டதாக தோன்றினாலும், பணப்புழக்கம் (பங்குகளில்) மற்றும் எதிர்கால மதிப்பீடுகள் யதார்த்தமானதாக இருக்கும் பல சிறந்த முதலீட்டு வாய்ப்புகள் உள்ளன. கடந்த சில ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசாங்கத்தின் மூலதனச் செலவு இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், அதே காலகட்டத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மானியங்கள் குறைந்துள்ளன. இவை சாதகமான போக்கைத் தீவிரப்படுத்தி பொருளாதாரத்தை மேலும் முன்னேற்றும். இதன் விளைவாக, உள்கட்டமைப்பு மற்றும் உற்பத்திப் பிரிவுகளில் நிறுவனங்கள் முழுவதிலும் அதிக வளர்ச்சி விகிதங்களைக் காண நாங்கள் எதிர்பார்க்கிறோம்," என்று டாடா அசெட் மேனேஜ்மென்ட் இன் மூத்த நிதி மேலாளர் சந்திரபிரகாஷ் படியார் கூறினார்.

# "கலைஞர்கள் திராவிடக் கழகத்தைத் தான் பின் தொடர வேண்டும் என்று சொல்வேன்" - ஆர்.கே,.செல்வமணி




சென்னை, 25 பிப் 2024: நேசமுரளி இயக்கி தயாரித்திருக்கும் திரைப்படம் 'கற்பு பூமி'. முன்னணி நடிகர் நடிகைகள் பலர் நடித்திருக்கும் இப்படத்தின் கதை பொள்ளாச்சி சம்பவத்தை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ளது. இப்படத்தின் பாடல் வெளியீடு நிகழ்வு நேற்று சென்னை பிரசாத் லேப்பில் நடைபெற்றது. அரசியல் பிரமுகர்கள் மற்றும் சினிமா பிரபலங்கள் கலந்து கொண்டு இந்நிகழ்வை சிறப்பித்தனர்.

படத்தின் இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர் நேசமுரளி பேசும் போது...

அனைவருக்கும் வணக்கம். இன்னைக்கி என்ன நடக்குது? கொள்ளிடம், கபிலவஸ்து இரண்டு படமும் சின்ன சின்ன கிடுக்குப்பிடில தப்பிச்சி வந்திருச்சிஞ் கொள்ளிடம் 2016-யிலும் கபிலவஸ்து 2019-யிலும் வெளியானது. கபிலவஸ்துலயும் எனக்குப் பிரச்சனை வந்தது. அதை மீறி சர்டிபிகேட் வாங்கி படத்தை ரீலிஸ் பண்ணேன். கற்பு பூமி படம் எதைப் பற்றியது என்றால் எல்லோருக்கும் தெரியும் பொள்ளாச்சியில் என்ன நடந்தது என்று. நக்கீரன் முதற்கொண்டு எல்லா செய்தித்தாள்களிலும் படித்த செய்திகளை வைத்துத் தான் நான் இந்தக் கதையை உருவாக்கி இருந்தேன். இந்த படம் துவங்கியதில் இருந்தே நெருக்கடி தான். இன்று கூட பாடல்களையோ படத்தின் காட்சிகளையோ திரையிடக்கூடாது என்று அவ்வளவு நெருக்கடி கொடுக்கிறார்கள்.

பொள்ளாச்சிக்கே சென்று மூன்று மாதங்கள் தங்கி இருந்தேன். அப்போது அறிந்து கொண்ட ஒரு சம்பவம் தான் இப்படம். இது போன்ற செய்திகள் எல்லாம் பெரும்பாலும் வெளியில் வரவில்லை. நான் இந்த சம்பவங்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரம் இருக்கிறது என்று சொல்கிறேன். அந்த ஆதாரங்களைத் தூக்கி வெளியே போடுங்கள் என்று சொல்கிறார்கள் சென்சார் போர்டு உறுப்பினர்கள். பத்திரிகைகளில் வந்த செய்தியை வைத்துக் கொண்டு உருவாக்கிய திரைப்படத்திற்கு ஏன் 109 வெட்டுகள்? இரண்டு மணி நேர படத்தைப் பார்த்துவிட்டு 4 மணி நேர விவாதத்திற்குப் பின்னர் அவர்கள் சொல்லிய முதல் வார்த்தை படத்திற்கு சர்டிபிகேட் தரமுடியாது.. நீங்கள் படத்தை ரீலிஸ் செய்ய முடியாது என்றார்கள். நான் அப்படி ஒன்றும் படத்தில் இல்லையே சார் என்று கேட்டதற்கு, இல்லை இப்படம் வெளியானால் இரண்டு கட்சிகளுக்கு இடையே பிரச்சனை வெடிக்கும். அதனால் அனுமதிக்க முடியாது, நீங்கள் வேண்டுமானால் ரிவைசிங் கமிட்டிக்கு அனுப்பி மறுபரிசீலனை கோருங்கள், நடிகை கவுதமி தலைமையில் 15 பேர் திரைப்படத்தைப் பார்த்து முடிவு செய்வார்கள் என்றார்கள்.

தியேட்டரில் சென்சார் உறுப்பினர்களுடன் படம் பார்க்க நான் என் நண்பர்களுடன் அமர்ந்திருக்கிறேன். யார் யாரோ வந்தார்கள். சிலர் ஏ.கே 47 துப்பாக்கி பாதுகாப்புடன் வருகிறார்கள். படத்தினைப் பார்த்துவிட்டு மீண்டும் நீண்ட விவாதத்திற்குப் பின்னர் படத்தின் எண்ட் கார்டை தூக்குங்கள் என்றார்கள். சரி அடுத்து என்ன என்று கேட்டால் பொள்ளாச்சி என்கின்ற டைட்டிலை தூக்குங்கள் என்கிறார்கள். பிரச்சனை நடந்த ஊரின் பெயரை எப்படி மாற்றுவது என்று நான் வாதிட்டுப் பார்க்கின்றேன். அவர்கள் யாரும் என் வாதத்தை கேட்கும் மனநிலையில் கூட இல்லை.

எங்கு பார்த்தாலும் பாலியல் பிரச்சனைகள் தலைவிரித்து ஆடுகின்றன. பத்து ஆண்டுகளுக்கு முன்னால் ஏதாவது ஒரு நாள் பத்திரிகையிலோ டிவியிலோ இது போன்ற செய்திகள் வரும். ஆனால் தற்போது அது போன்ற செய்தி இல்லாத நாளே இல்லை எனலாம்.

இப்படத்திற்கு நான் இயக்குநர் மட்டும் இல்லை தயாரிப்பாளரும் கூட என்பதால் படத்தை எப்படியாவது ரீலிஸ் செய்துவிட வேண்டும் என முடிவு செய்து, அவர்கள் சொன்ன 109 கட்-களுக்கு உடன்பட்டு, எண்ட் கார்டை தூக்கி, டைட்டிலை பொள்ளாச்சி என்று வைக்காமல் மாற்றி, யூனியனில் மற்றொரு டைட்டிலை ரிஜிஸ்டர் செய்து, மீண்டும் சென்சார் சர்டிபிகேஷனுக்கு விண்ணப்பித்தேன்.

என்னுடைய கதைகள் எல்லாமே பெண்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் கதைகள் தான். என் அடுத்த படமும் பாலியல் பிரச்சனை சார்ந்தது தான். இயக்குநர் சங்கத்தில் அய்யா செல்வமணி சார் அவர்கள் 2500 கதைகளைக் கேட்டு அதில் 52 கதைகளை படமாக்க தேர்வு செய்து வைத்திருக்கிறார்கள். அதில் என்னுடைய கதையும் ஒன்று. அதில் 10 கதைகளை அய்யா ஐசரி கணேஷ் அவர்கள் தயாரிப்பதாக கூறி இருக்கிறார்கள். அவருக்கு நன்றி.

பத்திரிகை ஆசிரியர் நக்கீரன் கோபால் பேசும் போது...

இயக்குநர் நேசமுரளி பேசியதைப் பார்த்தால் இனி படம் செய்யும் எண்ணம் அவருக்கு இல்லை என்று நினைக்கிறேன். இந்தப் பிரச்சினைகளுக்காகத் தான் நான் சினிமாவுக்கே வரவில்லை. பத்திரிகை பக்கம் போய்விட்டேன். இவர் பேசின மணல்மேடு, பொள்ளாச்சி மற்றும் மணிப்பூர் இவைகளை நாங்களும் பேசி இருக்கிறோம்.

இங்கு சென்சாரை நம்பித்தான் படமே எடுக்க வேண்டியிருக்கிறது. நாங்களும் கூஸ் முனுசாமி வீரப்பன்னு ஒரு டாக்குமெண்டரி பண்ணோம். அதைப் பார்த்துவிட்டு சிலர் கேட்டார்கள்ஞ் ஏன் இதை படமாகச் செய்யவில்லை என்று. வேறு வினையே வேண்டாம். சென்சாரிடம் இருந்து ஒரு ரீலும் தப்பாது. ஏன் தேவையின்றி அவர்களிடம் போய் கெஞ்ச வேண்டும் என்று கூறினேன்.

இந்த பொள்ளாச்சி மேட்டருக்கே வருகிறேன். மொத்தம் 1100 வீடியோக்கள், எங்களிடமிருந்தது வெறும் 3 மட்டும் தான். வெளியிடக் கூடாது என்று அதிகாரிகளும் ஒரு அரசியல் பிரமுகரும் மிரட்டினார்கள்.

சி பி சி ஐ டி அலுவலகத்தில் இருந்து சாட்சி விசாரணை செய்ய வேண்டும் என்று அழைப்பு வருகிறது. அவர்கள் என்னிடம் கேட்டக் கேள்வி யாரைக் கேட்டு வீடியோவை வெளியிட்டீர்கள் என்று கேட்டார்கள். நான் யாரைக் கேட்டு வெளியிட வேண்டும் என்று கேட்டேன். வெளியிட்டிருக்கவே கூடாது என்றார்கள். நான் அப்படி சட்டம் எதுவும் இருக்கிறதா என்று கேட்டேன். சட்டம் இல்லை ஆனால் அப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்றார்கள். குற்றவாளி தப்பாமல் இருக்கவும், இது போன்று இனி நடக்காமல் இருக்கவும் தான் நாங்கள் செயலாற்றி இதை செய்தி ஆக்குகிறோம் என்று கூறினேன்.

இயக்குநர் நேசமுரளியின் கோபமும் வேகமும் புரிகிறது. எங்களுக்கும் அந்த கோபம் இருக்கிறது. மணல்மேடு விஷயத்தை 1994லயே நான் அட்டைப்படமா எடுத்தேன். ஒரு பிள்ளைய வீடு தேடி வந்து சிதைச்சிட்டாய்ங்க. பால்டாயில் குடிச்சி குடும்பமே இறந்துட்டாங்க. 30 வருசம் ஆச்சி. இன்னும் இதுமாதிரி சம்பவம் குறைஞ்ச பாடு இல்லஞ் கூடத் தான் செய்யுதுஞ் இப்படத்தை எப்படி மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பது என்று யோசித்து செயல்படுங்கள். அதற்கு நக்கீரனும் துணை நிற்கும் என்று கூறி விடை பெறுகிறேன், நன்றி வணக்கம்.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# ஆண்கள் அழுவது அழகோ அழகு" 'டபுள் டக்கர்'திரைப்பட பத்திரிகையாளர் சந்திப்பில் இயக்குநர் மிஷ்கின் எல்லோரும் டாக்டர் ஆக விரும்புவார்கள், ஆனால் ஒரு டாக்டர் ஆக்டர் ஆக விரும்புகிறான்" - மிஷ்கின்

சென்னை, 25 பிப் 2024: ஏர் ஃபிளிக் தயாரிப்பில் மீரா மஹதி இயக்கத்தில் வித்யாசாகர் இசையில் இந்தியாவிலேயே முதல் முறையாக புதுமையாக வடிவமைக்கப்பட்டுள்ள அனிமேஷன் பாத்திரங்களுடன் தீரஜ், ஸ்முரிதி வெங்கட், கோவை சரளா எம்.எஸ். பாஸ்கர் மற்றும் பலர் நடித்திருக்கும் கலகலப்பான ஃபேன்டசி ஆக்ஷன் திரைப்படம் 'டபுள் டக்கர்'.

இப்படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று சென்னை சாலிகிராமத்தில் உள்ள பிரசாத் லேப்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் படத்தில் நடித்த நடிகர், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருடன் இயக்குநரும் நடிகருமான மிஷ்கின் கலந்து கொண்டார்.

படத்தின் இணை தயாரிப்பாளர் சந்துரு பேசியதாவது...

ஒரு படம் வெளியாவதற்கு முன்பாக பத்திரிகையாளர் சந்திப்பு நடப்பது என்பது வழக்கமான ஒன்று தான். ஆனால் நான் அதற்கு முன்னர் ஒரு டீசர் வெளியிட்டால் சிறப்பாக இருக்கும் என்று கருதினேன். ஏனென்றால் பத்திரிகையாளர்களாகிய நீங்கள் எந்த கோணத்தில் படத்தை அணுகுகிறீர்களோ, ஆடியன்ஸும் அதே மனநிலையில் தான் அப்படத்தை அணுகுவார்கள் என்பது என்னுடைய நம்பிக்கை. மேலும் படத்தைப் பார்த்துவிட்டு நீங்கள் எழுதுகின்ற எழுத்து தான் அப்படத்தை மக்களிடம் கொண்டு போய் சேர்க்கும் என்றும் நம்புகிறேன். ஒரு மூன்று வருடத்திற்கு முன்பு அவ்வளவு தான் இனி வாழ்க்கையில் ஒன்றும் இல்லை என்று எண்ணிக் கொண்டு, என் மீது துளியும் நம்பிக்கை இல்லாமல் இருந்த போது ஒரு கை வந்து என்னைத் தூக்கியது. அது தீரஜ்ஜின் கை. அவர் தான் என்னை முதன் முதலில் திரைக்கதைக்குள் வாருங்கள் என்று அழைத்துப் போனார். அப்படி என்னைக் கைப்பற்றி அழைத்து இன்று இங்கே கூட்டி வந்து விட்டுவிட்டார். மூன்று வருடங்களாக திரைக்கதையில் உழைத்து இப்படத்தை உருவாக்கி இருக்கிறோம்.

படத்தின் இயக்குநர் மீரா மஹதி பேசும் போது...

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம், 12 வருட உழைப்புக்குப் பின்னர் எனக்கு இந்த மேடை கிடைத்திருக்கிறது. நான் யாரிடமும் உதவி இயக்குநராகப் பணியாற்றியது இல்லை. இது வரை பத்து பனிரெண்டு குறும்படங்கள் எடுத்திருக்கிறேன். முகநூல் வட்டத்தில் இருக்கும் என் நண்பர்கள் குறும்படத்தைப் பார்த்துவிட்டு நீ சினிமாவே இயக்கலாம் என்று ஊக்கம் கொடுத்தார்கள். நான் கதை சொல்வதற்காக அஜீத், விஜய் போன்ற பெரிய ஹீரோக்களிடம் செல்லவில்லை. அவர்களை நெருங்கக்கூட முடியாது என்று தெரியும். மூன்று அல்லது நான்கு கோடி பட்ஜெட்டிற்குள் வரும் வளர்ந்து வரும் நாயகர்கள் சிலரிடம் தான் கதை சொல்ல முயன்று வந்தேன்.

ஆனால் அவர்கள் யாரும் ஒரு சாதாரண மனிதனுக்குக் கொடுக்கப்பட வேண்டிய மரியாதையைக் கூட எனக்குக் கொடுக்கவில்லை. நான் கேட்டதெல்லாம் வெறும் ஐந்து நிமிடம் மட்டும் தான். அதை எனக்கு யாருமே கொடுக்கவில்லை.




மைம் கோபி அவர்கள் மூலமாகத் தான் இந்த வாய்ப்பு எனக்கு வந்தது. நான் ஒரு இண்டிபெண்டண்ட் ஃபிலிம் மேக்கர் என்று சொல்லிக் கொண்டு மைம் கோபி சாரிடம் கதை சொல்லப் போயிருந்தேன். மைம் கோபி சார் தான் என்னை தீரஜ் சாரிடம் அறிமுகம் செய்து வைத்தார்கள். தீரஜ் சார் என்னிடம் எதுவுமே கேட்கவில்லை, நீ என்ன சாதி..? என்ன மதம்ஞ்? யாரிடம் வேலை பார்த்தாய்..? என்று எதுவுமே என்னிடம் கேட்கவில்லை அவர் கேட்டதெல்லாம் ஐந்து நிமிடத்தில் என்னை உன்னால் இம்ப்ரஸ் செய்ய முடியுமா..? என்று கேட்டார். நான் அந்த ஐந்து நிமிடத்தைத் தான் யாரும் எனக்குக் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள் சார் என்று சொன்னேன். அவர் கொடுத்தார். நான் கதை சொல்லத் துவங்கினேன். கதை சொல்லி முடிக்கும் போது 1 மணி நேரம் ஆகியிருந்தது. ஷூட்டிங்கை நிறுத்திவிட்டு தீரஜ் சார் என்னிடம் கதை கேட்டார்.

ஆரம்பிக்கும் போது இப்படம் சிறிய படமாகத் தான் இருந்தது. படத்தில் வரும் அனிமேஷன் பகுதிகளை நான் ஏற்கனவே மனதில் டிசைன் செய்து வைத்திருந்தேன். பிறகு படத்தில் வரும் அனிமேஷன் பகுதிகளைப் பற்றிக் கேட்டுவிட்டு தீரஜ் சார், இது சூப்பராக ஒர்க்-அவுட் ஆகும், நாம் இதை கண்டிப்பாக பெரிய அளவில் செய்வோம் என்று கூறி படத்தின் பட்ஜெட்டை எட்டு மடங்காக உயர்த்திவிட்டார். பின்னர் சப்போர்ட்டிங் ஆர்டிஸ்ட் எல்லாம் வந்தப் பின்னர் படத்தின் பட்ஜெட் இன்னும் கொஞ்சம் அதிகமானது.

எனது முதல் மேடையிலேயே மிஷ்கின் சார் அமர்ந்திருப்பதை நான் என் பாக்கியமாகக் கருதுகிறேன். இந்த வாய்ப்பை எனக்குக் கொடுத்த அனைவருக்கும், இந்தப் படத்தின் உருவாக்கத்தில் ஈடு இணையின்றி உழைத்த அனைவருக்கும் என் நன்றிகள். என்னைப் போல் வளர்ந்து வரும் இயக்குநர்களுக்கு பத்திரிகை நண்பர்கள் ஆதரவு கொடுங்கள். நீங்கள் சொல்வதையும் எழுதுவதையும் தான் மக்கள் நம்பி திரையரங்கிற்கு வருவார்கள். நாங்கள் எவ்வளவு சொன்னாலும் மக்கள் நம்பமாட்டார்கள். நீங்கள் சொல்வதைத் தான் நம்புவார்கள். 'டபுள் டக்கர்' படத்தைப் பற்றி எழுதி எங்களுக்கு ஆதரவு தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இயக்குநரும் நடிகருமான மிஷ்கின் பேசும் போது...

காலதாமதமாக வந்ததற்கு முதலில் எல்லோரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். நான் செல்போனை அணைத்து வைத்துவிட்டு தொடர்ச்சியாக படப்பிடிப்பில் இருந்தேன். எதேச்சையாக போனை ஆன் செய்த போது தீரஜ் இடம் இருந்து போன் வந்தது. தொடர்ச்சியாக ஷூட்டிங்கும் இருந்தது. இன்று 2 மணியிலிருந்து 10 மணி வரை கால்ஷீட். என்ன செய்வது என்று தெரியாமல் ஷூட்டிங்கை கேன்சல் செய்துவிட்டு வந்துவிட்டேன். ஏனென்றால் தீரஜ்ஜை எனக்கு அவ்வளவு பிடிக்கும். ஏன் பிடிக்கும் என்று கேட்டால், அவன் இதுவரை குறைந்தது ஒரு 500 உயிரையாவது காப்பாற்றி இருப்பான். அவன் ஒரு இதய சிகிச்சை நிபுணர். குறைவாக சொல்கிறேன் என்று நினைக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் ஆயிரத்திற்கும் அதிகமான உயிர்களை காப்பாற்றிய மருத்துவர் அவன். உதய்க்கு நெருங்கிய நண்பன், நம் முதல்வரை சூழ்ந்திருக்கும் முக்கிய மருத்துவர்களில் தீரஜ்ஜும் ஒருவன். சற்றும் தலைக்கணம் இல்லாதவன், மிகுந்த அன்பு கொண்டவன், எளிமையாகப் பழகக்கூடியவன். அவன் கூப்பிட்டதும், அவன் இந்த உலகத்திற்குச் செய்த சேவைக்காக என் படப்பிடிப்பை ரத்து செய்துவிட்டு நான் வந்துவிட்டேன்.

ஒரு மருத்துவராக அவன் அவனுக்கான உயரத்தினை எப்போதோ அடைந்துவிட்டான். ஆனால் அதையும் மீறி அவன் ஒரு ஆக்டர் ஆக வேண்டும் என்று விரும்புகிறான். எல்லோரும் டாக்டர் ஆக விரும்புவார்கள். ஒரு டாக்டர் ஆக்டர் ஆக விரும்புகிறான். என்னைப் பொருத்தவரை ஒரு டாக்டர், நடிகன், இயக்குநர் மூவரும் ஒன்று தான். எல்லோரும் அறிந்தபடி டாக்டர் இதயத்தை அப்படியே திறந்து அதில் இருக்கும் பிரச்சினைகளை சரி செய்கிறார். அது போல் தான் கதை சொல்லியாகிய இயக்குநரும் ஒரு இதயத்தை திறக்காமல் திறந்து ரசிகனின் இரணத்தை ஆற்றி அவனை சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கிறான். ஆக மூன்று பேரும் ஒன்றுதான்.

என் திரைப்படங்களில் மருத்துவ தொழில்நுட்பம் சார்ந்த காட்சிகள் இடம் பெறும் போது, அதில் ஏற்படும் குழப்பங்களை தீரஜ்ஜிடம் தான் கேட்பேன். அவன் தான் அதைத் தீர்த்து வைப்பான். மிக எளிமையாக எனக்கு அது குறித்து விளக்கம் கொடுப்பான். இயல்பாகவே கலகலப்பான பையன் அவன். படங்களும் ஜனரஞ்சகமாக, கலகலப்பாக இருக்க வேண்டும் என்று விரும்புவான். அவனுடன் இருந்தாலே மிகவும் சந்தோஷமாக இருக்கும்.

சந்துரு விமானத்தில் பணியாற்றியவர். ஒரு முறை என்னுடைய விமானப் பயணத்தின் போது அறிமுகப்படுத்திக் கொண்டு சார் உங்களோட பெரிய விசிறி, உங்கள் படங்கள் மிகவும் பிடிக்கும் என்றார். என் தொலைபேசி எண்ணை வாங்கிக் கொண்டார். இரண்டு மாதங்கள் கழித்து எனக்குப் போன் செய்து சார் உங்களை சந்திக்க முடியுமா என்று கேட்டார். நான் வரச் சொன்னேன். வந்ததில் இருந்து சினிமாவைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார். பின்னர் மீண்டும் ஆறு மாதங்கள் கழித்து என்னைப் பார்க்க வந்தார். சார் நான் படம் எடுக்கப் போகிறேன் என்றார். நான் அவனிடம் நீ உயரே பறந்து கொண்டிருக்கிறாய். ஏன் கீழே பறக்க ஆசைப்படுகிறாய் என்று கேட்டேன்.

அவன் இயக்கிய குறும்படத்தைப் பார்த்தேன். நல்ல மேக்கிங். ஏனோ மக்களிடம் பெரிதாக சென்று சேரவில்லை. பின்னர் ஒரு வருடம் கழித்து வந்து நான் இந்தப் படத்தில் இணை தயாரிப்பாளர் என்று கூறினார். சினிமா என்பது எவ்வளவு உயரத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் அவர்களைத் தன்பால் ஈர்க்கிறது.

இயக்குநர் மீரா மஹதி இந்த நிகழ்ச்சியில் உணர்ச்சிவசப்பட்டு கண்கலங்கினார். அழுகை அழகு. அதிலும் ஆண்கள் அழுவது அழகோ அழகு. வெட்கமில்லாமல் ஆண்கள் அழுவது என்னுடைய உதவி இயக்குநர்களுடன் நான் எப்போதுமே சினிமா பற்றி மட்டும் தான் பேசிக்கொண்டே இருப்பேன்.. ஒரு 50 எம் எம் லென்ஸுக்கும் ஒரு 35 எம் எம் லென்ஸுக்கும் 15 டிகிரி தான் வித்தியாசம், ஆனால் அந்த பதினைந்து டிகிரி வித்தியாசத்தை தெரிந்து கொள்ள 5 அல்லது 6 வருடங்கள் தேவை. தமிழ் சினிமாவில் லென்ஸைப் பற்றித் தெரிந்த ஒரு சில இயக்குநர்களில் நானும் ஒருவன். சினிமாவில் மட்டும் தான் லெஸ் ஈஸ் மோர். பத்திரிகைக்காரர்கள் எப்போதும் என்னை தூக்கிவிட்டிருக்கிறீர்கள். நந்தலாலா, ஓநாயும் ஆட்டுக்குட்டியும் படங்களை நன்றாக இல்லை என்று சிலர் சொன்ன போது, அதை தூக்கிப் பிடித்தவர்கள் நீங்கள் தான். நீங்கள் நடிகர் நடிகைகள் பற்றி எழுதும் போதும் கவனமாக எழுதுங்கள், இப்படம் வெற்றி பெற வாழ்த்துகிறேன். இப்படத்திற்கு ஆதரவு கொடுங்கள். நன்றாக இருக்கும்பட்சத்தில் நீங்கள் கண்டிப்பாக மக்களிடம் கொண்டு போய் சேர்த்துவிடுவீர்கள் என்று தெரியும். உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி.

# வேலூரில் உள்ள லைஃப் சயின்ஸ் பட்டதாரி மாணவர்கள் பிப்ரவரி 28 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு எக்ஸ்டியான் அழைக்கிறது. சி எஸ் ஆர் முன்முயற்சியின் கீழ் இலவச மென் திறன்கள் & தொழில்நுட்பப் பயிற்சி 'பரிவர்த்தனம்'.

வேலூர், 25 பிப் 2024: தகவல் தொடர்பு, நேர்காணல் ஆசாரம், கார்ப்பரேட் ஆசாரம், நேர மேலாண்மை மற்றும் தேவையான தொழில்நுட்ப திறன்கள் போன்ற அத்தியாவசிய திறன்கள் இல்லாததால் விண்ணப்பதாரர்கள் பெரும்பாலும் வேலை வாய்ப்பை இழக்கின்றனர். இன்றைய போட்டிச் சந்தையில், பயனுள்ள தகவல் தொடர்பு, நிறுவன விதிமுறைகளைப் புரிந்துகொள்வது மற்றும் நேரத்தை திறமையாக நிர்வகித்தல் ஆகியவை வெற்றிக்கு முக்கியமானவை.

முன்னணி தொழில்நுட்ப நிறுவனமான எக்ஸ்டியான்-ன் சி எஸ் ஆர் முன்முயற்சியான 'பரிவர்தனம்', இந்த இடைவெளிகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது, மேலும் விண்ணப்பதாரர்கள் தங்கள் தொழில் முயற்சிகளில் அதிக வேலைவாய்ப்பையும் நம்பிக்கையையும் பெற உதவுகிறது.

நுண்ணுயிரியல், உயிர்வேதியியல், உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் விலங்கியல் போன்ற துறைகள் உட்பட, லைஃப் சயின்ஸ் மாணவர்களுக்காக பிரத்தியேகமாக இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்களுக்கான பதிவு மற்றும் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு பிப்ரவரி 28, 2024 ஆகும். ஆர்வமுள்ள நபர்கள் தங்கள் மின்னஞ்சல் ஐடி, மொபைல் எண், இறுதித் தேர்வு முடிவுகள் மற்றும் தேர்ச்சி பெற்ற ஆண்டு உள்ளிட்ட தங்களது சுயவிவரங்கள்/பயோடேட்டாவை உடனடியாக ஜீணீக்ஷீவீஸ்ணீக்ஷீ மீணீ ஸீணீ@மீஜ்ப்பீவீஷீஸீ.நீஷீனீ என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். . தகுதியான விண்ணப்பதாரர்கள் 60% மற்றும் அதற்கு மேல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

பயிற்சி இலவசமாக வழங்கப்படுகிறது மற்றும் மதிப்பீடு மார்ச் 2, 2024 அன்று திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சி மார்ச் 7 ஆம் தேதி எக்ஸ்டியான் சொல்யூஷன்ஸ்-ல் தொடங்குகிறது. லிமிடெட், வேலூர், 6 வாரங்கள் நீடிக்கும், முதல் 3 நாட்கள் "கேம்பஸ் டு கார்ப்பரேட்" மாறுதல் பயிற்சிக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்தப் பயிற்சியைத் தொடர்ந்து, அமெரிக்க சுகாதாரத் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், மருத்துவக் குறியீட்டு முறை குறித்த 5 வார தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படும்.

ஆபரேஷன்ஸ் சீனியர் துணைத் தலைவர் லோஹித் கே. ரெட்டி கருத்துத் தெரிவிக்கையில், "திறமையை வளர்ப்பதற்கும், அடிப்படைத் திறன்கள் இல்லாதவர்கள் தங்கள் முழுத் திறனையும் உணர்ந்து கொள்வதற்கான பாதைகளை உருவாக்குவதற்கும் பரிவர்த்தனம் எங்கள் அர்ப்பணிப்பை உள்ளடக்கியது. இந்த மென் திறன்கள் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டம், ஒவ்வொரு பங்கேற்பாளரும் கார்ப்பரேட் உலகில் வெற்றிகரமாக வெளிப்படுவதை உறுதிசெய்யும் வகையில், முக்கியத் திறன்களை வளர்த்துக்கொள்ளும் வகையில் உன்னிப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

# நியாயமான மற்றும் பொறுப்பான கேமிங்கிற்கான தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் ரம்மிகல்சர்க்கான 'டிரஸ்ட் ரிப்போர்ட்டை' கேம்ஸ்கிராப்ட் வெளியிட்டுள்ளது

சென்னை, 25 பிப் 2024: சுத்தமான, புதிய காற்றை சுவாசிப்பது நல்ல ஆரோக்கியத்திற்கும் நல்வாழ்விற்கும் முக்கியம். இருப்பினும், உலகம் முழுவதும், இது ஏறக்குறைய சாத்தியமில்லாத ஒன்றாகவே திகழ்கிறது. உதாரணமாக, 2022ல் உலகளவில் மிகவும் மாசுபட்ட நகரங்களின் முதல் 10 இடங்களில் ஆறாவது இடத்தை இந்தியப் பகுதிகள் இடம்பெற்றுளள்ன. காற்றுத் தர வாழ்க்கைக் குறியீட்டின் அறிக்கை, காற்றில் அதிக அளவு மாசு அல்லது துகள்கள் (புகை, தூசி மற்றும் பல போன்றவை) இருப்பதைக் கண்டறிந்துள்ளது. உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப காற்றின் தரம் காரணமாக, இந்தியாவில் சராசரி நபரின் ஆயுட்காலம் 5.3 ஆண்டுகள் குறைகிறது. சில காற்று மாசுபாடுகளின் அதிக செறிவு உள்ள பகுதிகளில், இன்ஃப்ளூயன்ஸா (அல்லது ஃப்ளூ) போன்ற சுவாச நோய்த்தொற்றுகள் பெரும்பாலும் காணப்படுகின்றன. காற்று மாசுபாடு பருவங்கள் முழுவதும் சுற்றுச்சூழல் சுகாதார பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது, கோடையில் தூசி முதல் குளிர்காலத்தில் புகை மற்றும் மூடுபனி வரை அதை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டியது முக்கியமாகும். மோசமான காற்றின் தரம் மற்றும் அதிகரித்து வரும் சுவாசப் பிரச்சனைகளுக்கு இடையே உள்ள தொடர்புகள் குறித்து சுகாதார நிபுணர்கள் தங்கள் கவலைகளை தெரிவித்துள்ள நிலையில், இப்போது செயல்பட வேண்டியது அவசியமாகியுள்ளது. அதிர்ஷ்டவசமாக, மக்கள் மேற்கொள்ளத்தக்க சில படிகள் உள்ளன. அபாட் இந்தியாவின், மருத்துவ விவகாரங்கள் இயக்குனர், டாக்டர் ஜேஜோ கரன்குமார் அவர்கள், "வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் மக்கள் ஆரோக்கியமாக இருக்க உதவுவது முக்கியம். காற்று மாசுபாடு மற்றும் இன்ஃப்ளூயன்ஸா போன்ற சுவாசப் பிரச்சனைகள் இதில் குறுக்கிடலாம். இன்ஃப்ளூயன்ஸா போன்ற நோய்த்தொற்றுகளுக்கு எதிராக, குறிப்பாக அதன் நோவுகள் அதிகரித்து வரும் நேரத்தில், மக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது முக்கியம். தடுப்பு பராமரிப்பு முக்கியமானது, மேலும் அதிகமான மக்கள், குறிப்பாக ஆபத்தில் உள்ளவர்கள், அதிக பாதுகாப்பிற்காக வருடாந்திர இன்ஃப்ளூயன்ஸா தடுப்பூசியைப் பெறுவது இன்றியமையாததாகும்.

சென்னை போரூரில் உள்ள பீடியாட்ரிக் மெடிசனின் முதுநிலை ஆலோசகர் டாக்டர் வில்வநாதன் அவர்கள், "மோசமான காற்றின் தரம் ஒருவரின் ஆரோக்கியத்தை பெரிதும் பாதிக்கும் - மேலும் சென்னையில் புகை மற்றும் காற்று மாசுபாட்டால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை தோராயமாக 12% அதிகரித்துள்ளது. குறிப்பாக 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மூச்சுத் திணறல் மற்றும் இருமல் போன்ற அறிகுறிகளை அனுபவித்து வருகின்றனர் - மேலும் கடந்த 6 மாதங்களில் இன்ஃப்ளூயன்ஸா போன்ற நோய்களின் எண்ணிக்கையில் சுமார் 8% அதிகரிப்பு உள்ளது. மாசுபட்ட காற்று ஒருவருக்கு இன்ஃப்ளூயன்ஸா இருக்கும்போது இதை மேலும் மோசமாக்கக்கூடும். மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வது முக்கியம். வெளியில் இருக்கும்போது முகமூடி அணிவது அல்லது காற்று மாசு அதிகமாக இருக்கும்போது வீட்டுக்குள்ளேயே தங்குவது, வெளியில் சென்றுவந்த பிறகு முகம் மற்றும் கைகளைக் கழுவுவது போன்ற நல்ல சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது மற்றும் தொற்றுநோயைத் தவிர்க்க ஆண்டுதோறும் இன்ஃப்ளூயன்ஸா தடுப்பூசியைப் பெறுவதன் மூலம் அவர்கள் இதைச் செய்யலாம்.